**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்கரன்கோவில்.**

**நாள்.25.09.2025**

**O.S. No.343/2015**

**வா.சா. 2- தங்கபாண்டியன்**

**7ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

நான் சாட்சி சொல்ல வந்துள்ள சொத்தினுடைய விவரங்கள் தெரியுமா என்றால் தெரியும். நான் சாட்சி சொல்ல வந்துள்ள சொத்தினுடைய சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. நான் சாட்சி சொல்ல வந்துள்ள சொத்து ஆதியில் யாருக்குப் பாத்தியப்பட்டது என்றால் வீரபுத்திரத்தேவருக்குப் பாத்தியப்பட்டது. வீரபுத்திரத்தேவருக்கு எவ்வளவு சொத்து பாத்தியப்பட்டது என்றால் 90 செண்ட் பாத்தியம். வீரபுத்திரத்தேவருக்கு வாரிசுகள் யார் என்றால் முத்தையா தேவர், பால் தேவர், பெண் மக்கள் 4 பேர் சின்ன மாடத்தி, பெரிய மாடத்தி, ஆறுமுகத்தாய், கோமதியம்மாள். வீரபுத்திரத்தேவர் மகன் முத்தையா தேவரை நேரடியாகப் பார்த்துள்ளேனா என்றால் சாட்சி தற்போது வீரபுத்திரத்தேவர் மகன் முத்தையா தேவர் இல்லை கட்டாரிதேவர் என சாட்சியம் அளிக்கிறார். வாதி செல்வராஜ் எனக்கு யார் என்றால் எனது மச்சினன் நான் கட்டாரி தேவர் மகளை திருமணம் முடித்துள்ளேன். வாதி செல்வராஜ் எங்கு குடியிருக்கிறார் என்றால் கோவில்பட்டியில் 20 வருடங்களாக குடியிருக்கிறார். வீரபுத்திரத்தேவருக்கு பல சொத்துக்கள் உண்டு என்றால் சரிதான் அதை விற்றுவிட்டார். முதலில் கட்டாரி தேவர் விற்றார், பின்னர் பால் தேவர் விற்றார் என்றால் சரிதான். வீரபுத்திரத்தேவருக்கு வீடு வாசல் உண்டு என்றால் 2 வீடுகள் உண்டு அதில் கட்டாரி தேவர் தனியாகவும், பால் தேவர் தனியாகவும் வசித்து வருகிறார்கள். கட்டாரி தேவர், பால் தேவர் மேற்படி வீடுகளை பாகம் செய்துகொண்டார்களா என்றால் ஆமாம் பாகம் பிரித்துக்கொண்டு தனித்தனியாக அனுபவித்து வருகிறார்கள். வீரபுத்திரத்தேவருக்கு வீடு தவிர மானாவாரி புஞ்சை உண்டு என்றால் சரிதான். மேற்படி மானாவாரி புஞ்சை என்ன ஆனது என்றால் கட்டாரி தேவர் மக்களும், பால் தேவர் மக்களும் அவர்களுக்குள் பிரித்த பாகத்தை தனித்தனியாக விற்றுவிட்டார்கள்.

கட்டாரி தேவருக்கும், பால் தேவருக்கும் தற்போது எவ்வளவு சொத்துக்கள் உள்ளது என்றால் அனுபவத்தில் உள்ள கொஞ்ச சொத்துக்கள் தான் உள்ளது வேறு சொத்துக்கள் கிடையாது. கட்டாரி தேவருக்கு மொத்தம் எத்தனை வாரிசுகள் என்றால் முதல் மனைவிக்கு ஒரு பெண் மகள் உண்டு, 2 வது மனைவிக்கு 3 மகன்கள், 2 பெண் மக்கள். மேற்படி வாரிசுகள் உயிருடன் உள்ளார்களா என்றால் சீனிப்பாண்டி என்ற மகன் இறந்துவிட்டார். கட்டாரி தேவரின் 2 மனைவிகளும் சொத்துக்களை பிரித்துக்கொண்டார்களா என்றால் பாகம் பிரிக்கவேண்டும் என பேசப்பட்டது ஆனால் பிரிக்கவில்லை. கட்டாரி தேவரின் 2 மனைவிகளும் சொத்துக்களை எப்போது பிரித்தார்கள் என்றால் 10 வருடங்களுக்கு மேலாக இருக்கும் ஆளுக்குப் பாதியாக பிரித்துக்கொண்டார்கள் பெரியவர்கள் முன்னிலையில் பிரித்தார்கள். எனக்கு எப்படி இந்த விவரம் தெரியும் என்றால் பால் தேவர், கட்டாரி தேவர் இருவருக்கும் நான் விதைத்துக்கொடுத்துள்ளேன் மேலும் அந்த பாதை வழியாகத் தான் நான் செல்ல வேண்டும் அதனால் எனக்கு பாகம் பிரிக்கப்பட்ட விவரம் தெரியும். பால்தேவருக்கு எந்தப் பக்க சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் கீழ்பக்கம். மேல்பக்கம் கட்டாரி தேவருக்கு ஒதுக்கப்பட்டு அனுபவித்து வந்தார் என்றால் சரிதான். எனக்கு தொழில் என்ன என்றால் கூப்பிட்டால் எந்த வேலை வேண்டுமானாலும் செய்வேன். எனக்கு தபசில் சொத்து பற்றி தெரியாது நான் செல்வராஜூக்காக பொய்யாக சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

<u>**குறுக்கு விசாரணை முடிக்கப்படுகிறது.**</u>

<u>**மறுவிசாரணை இல்லை.**</u>

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.09.25 17:25:38 +0530